## தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்.

Praise the Lord:

Let us pray. ..

இடைவிடாமல், சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபிக்கிற நாம், ஜெபத்திலே உறுதியாய்த்தரித்திருக்கின்றோம்.

**கவலைபடாதீர்கள்…….**

தேவன் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். (1 பேதுரு 5:7)

சத்தியமும் கிருபையும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் செய்கிற கிறிஸ்து, கிறிஸ்துவான வார்த்தை சொல்கிறது:

சங்கீதம்/ Psalm 46:1 (பக்கம் 698)

தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்.

God is our refuge and strength, an ever-present help in trouble. (NIV)

…always ready to help in times of trouble. (NLT)., ….a very present help in trouble. (KJV)

GOD IS our Refuge and Strength [mighty and impenetrable to temptation], a very present and well-proved help in trouble. (AMP)

இந்த வசனத்திலே உள்ள 3 வார்த்தைகளை கவனியுங்கள்.

அடைக்கலமும் (refuge) நமக்கு அடைக்கலம் கொடுக்கிற தேவன்.

பெலனும், (strength)

நாம் அவர் பலத்த கரத்திற்குள் அடைங்கியிருக்க முடியாதபடி நமக்கு வருகிற எல்லா எதிர்ப்பான சூழ்நிலைக்கும் எதிர்த்து நிற்க அவரே நமக்கு பெலனாக இருக்கிறவர்.

ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர். a very present help in trouble

கர்த்தருக்கு மாறாத சூழ்நிலைகளை எதிர்த்து நிற்கும்போது நமக்கு வரும் ஆபத்துக்களில் அவரே நமக்கு அநுகூலமான துணையுமாக இருக்கிறார்.

தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்.

Ref: Dictionary: அனுகூலம்: தேவையை நிறைவு செய்வதற்கான வகையில் அமைவது., சாதகம், favourable, பயன், நன்மை, benefit

கர்த்தர் நமக்கு பெலனும் ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவராக இருக்கிறபடியினால் நாம் நிச்சயமாக அவருடைய பலத்த கரத்துக்குள் அடங்கியிருக்கமுடியும்.

ஆமென்.

ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். (1 பேதுரு 5:6)

ஒரு வசனத்தை நாம் வாசிப்பதும், அந்த வசனம் நம்மிலே ஜீவப்பதும் வெவ்வேறான காரியம்.
ஒரு வசனம் நம்மிலே ஜீவிப்பதும், அது வளர்ந்து பூரணப்படுவதும் வெவ்வேறான காரியம்.
(ஒரு பிரசங்கத்தை கேட்பதும் / பிரசங்கிப்பதும், அது நம் வாழ்விலே பிரதிபலிப்பதும் வெவ்வேறான காரியம்.)

சங்கீதம்/ Psalm 46:1-3 (பக்கம் 698)

1. தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்.
2. ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும்,
3. அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும்,

**நாம் பயப்படோம். (சேலா.)**

God is our refuge and strength, an ever-present help in trouble.

Therefore we will not fear, though the earth give way and the mountains fall into the heart of the sea, though its waters roar and foam and the mountains quake with their surging. **Selah**

Ref: KJV Bible Dictionary:

சேலா (Selah)

A Hebrew word of uncertain meaning found in Habakkuk and certain Psalms as 3,4,9. The word may have indicated a pause in the musical accompaniment of the psalm.

In AMP Bible it translated as: **Selah [pause, and calmly think of that]!**

அடுத்தவசனத்துக்குப் போகுமுன் சற்று நிறுத்தி, அமைதியாக சிந்தித்துப் பாருங்கள்.

*பூமி….பூமியிலே உள்ள சமுத்திரம்…..சமுத்திரத்திலே உள்ள மலைகள்……*

*உலகம்…..உலகத்திலே உள்ள மனிதர்கள்……மனிதர்களுக்குள்ளேயுள்ள எண்ணங்கள்…..*

*இப்படி உங்கள் வாழ்க்கையின் பல காரியங்களை நீங்கள் இங்கே தியானித்துப் பாருங்கள்…*

*ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும்,….*

*மனிதர்களின் தகாத எண்ணங்கள், பெலவீனமான எண்ணங்கள் நம்மை தாக்கினாலும்……*

**நாம் பயப்படோம்.**

சங்கீதம்/ Psalm 46:1-3 வாசித்தபிறகு கொஞ்சம் நிறுத்தி, அமைதியாக தியானியுங்கள்....

ஜீவனுள்ள வார்த்தைகள் உங்களை பெலப்படுத்தும்....
ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். (1 பேதுரு 5:6)
தேவனுடைய கரத்துக்குள் அடங்கியிருக்க,
தேவனே நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்.
எந்த சூழ்நிலையிலும் .... **நாம் பயப்படோம்.** என்று ஆறுதலாகவும், உறுதியோடும் இருந்து,
நாம் வாழ்க்கையை கர்த்தருக்குள் மகிழ்ச்சியாக கடந்து செல்லும்போது,
இரக்கத்தில் ஐசுவரியமுள்ள நமது தேவன்
நம்மை எல்லா இக்கட்டுகளுக்கும் நீக்கி விடுவிப்பார். ஆமென்.

## சங்கீதம்/ Psalm 46:4-7

ஒரு நதியுண்டு, அதின் நீர்க்கால்கள் தேவனுடைய நகரத்தையும், உன்னதமானவர் வாசம்பண்ணும் பரிசுத்த ஸ்தலத்தையும் சந்தோஷிப்பிக்கும்.
தேவன் அதின் நடுவில் இருக்கிறார், அது அசையாது; அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார்.
ஜாதிகள் கொந்தளித்தது, ராஜ்யங்கள் தத்தளித்தது; அவர் தமது சத்தத்தை முழங்கப்பண்ணினார், பூமி உருகிப்போயிற்று.
சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்; யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர். **(சேலா.)**
There is a river whose streams make glad the city of God, the holy place where the Most High dwells.
God is within her, she will not fall; God will help her at break of day.
Nations are in uproar, kingdoms fall; he lifts his voice, the earth melts.
The LORD Almighty is with us; the God of Jacob is our fortress. Selah
அடுத்தவசனத்துக்குப் போகுமுன் சற்று நிறுத்தி, அமைதியாக சிந்தித்துப் பாருங்கள்.
இந்த வசனங்களிலே தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்திலே உண்டாகும் சந்தோஷத்தை அறிகிறோம்.
இந்த சந்தோஷம் நமக்கு தேவகிருபையாலே கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே நாம் பயப்படோம்.
தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்.
என்று சொல்வதுமட்டமல்ல, அப்படிச் சொல்கிற வார்த்தை நம்மிலே ஜீவித்து வளரும். ஆமென்.

## சங்கீதம்/ Psalm 46:8-11

பூமியிலே பாழ்க்கடிப்புகளை நடப்பிக்கிற கர்த்தருடைய செய்கைகளை வந்து பாருங்கள்.
அவர் பூமியின் கடைமுனைமட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார்; வில்லை ஒடித்து, ஈட்டியை முறிக்கிறார்; இரதங்களை நெருப்பினால் சுட்டெரிக்கிறார்.
நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்; ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன்.
சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார், யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர். **(சேலா.)**
Come and see the works of the LORD, the desolations he has brought on the earth.
He makes wars cease to the ends of the earth; he breaks the bow and shatters the spear, he burns the shields [a] with fire.
"Be still, and know that I am God; I will be exalted among the nations, I will be exalted in the earth."
The LORD Almighty is with us; the God of Jacob is our fortress. Selah
இப்பொழுதும் சற்று நிறுத்தி, அமைதியாக சிந்தித்துப் பாருங்கள்.
இந்த வசனங்களிலே, விசுவாசத்தோடு கர்த்தரிடத்தில் அடைக்கலமாக இருந்து, அவர் செய்யும் பெரிய காரியங்களை அறிந்துகொள்ளச் சொல்லுகிறது வசனம்..
*இந்த முழு அதிகாரத்திலும்...*
*முதல் வசனம்:* தேவன் நமக்கு அடைக்கலமும்.........
*7வது வசனம்:* தேவன் நமக்கு **உயர்ந்த** அடைக்கலமானவர்.
*கடைசி வசனம்:* தேவன் நமக்கு **உயர்ந்த** அடைக்கலமானவர்.
இந்த ஒரு அதிகாரம் வாசித்து முடிக்கும்போதே, நமது விசுவாசம் ஒருபடி வளர்கிறது.
தேவன் நமக்கு அடைக்கலமானவர் *என்று ஆரம்பித்து.........*
தேவன் நமக்கு **உயர்ந்த** அடைக்கலமானவர் *என்று முடிகிறது.*

உலகத்தின் பல காரியங்களை நீங்கள் நன்கு சிந்தித்துப் பாத்தால்.....
ஒரு நிகழ்ச்சியை...செய்தியை....காட்சியை அறியும்போது ஏற்படுகிற உணர்வு, அந்த சமயத்தில், நம்மை ஏதாவது செய்ய தூண்டும். அல்லது மனதிலே ஜெபிப்பதற்காவது தூண்டும்.
அதன்பிறகு,
நாளடைவில் அதுபற்றிய எண்ணம் குறையும். அல்லது அந்த எண்ணமே இல்லாமல்,
நாம் நமது வாழ்க்கையை முன்போலவே தொடருவோம்.
இது உலக சாதாரண வழக்கு. (ஒருவகையிலே இது உலக சந்தோஷத்திற்கு உதவுகிறது....!!!!)

கிறிஸ்து உலகத்தாரல்லாததுபோல நாமும் உலகத்தாரல்ல என்று கிறிஸ்துவே சொல்கிறார். (யோவான் 17:16)
கிறிஸ்துவின் வார்த்தையை நாம் வாசித்து தியானித்தபிறகு, ஆவியாயும் ஜீவனாயும் உள்ள வார்த்தைகள், வேதத்தின் நிகழ்ச்சிகளின் உணர்வுகள் நம்மிலே நாளடைவில் குறையாது. அது பெருகும். நம் வாழ்க்கை முன்போலவே இருக்காது. கிறிஸ்துவுக்குள் வளரும். ஆமென்.

நாம் தேவனுடைய ஒவ்வொரு ஆராதனைக்கும் வந்து,
அவரை மகிமைப்படுத்தி, துதித்து பாடி வசனத்தை தியானித்து ஜெபித்து செல்லும்போது.....
கர்த்தர்மேல் நமக்குள்ள விசுவாசம் மேலும் உறுதிப்பட்டு வளரவேண்டும்.....ஆமென்.

## <u>எபிரெயர்/Hebrews 6:18</u> (பக்கம் 302)

நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி **அடைக்கல**மாய் ஓடிவந்த நமக்கு **<u>இரண்டு மாறாத விசேஷங்களினால்</u>** நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார்.
God did this so that, by two unchangeable things in which it is impossible for God to lie, we who have fled to take hold of the hope offered to us may be greatly encouraged.

*தேவனுடைய வாக்குத்தத்தங்களும் அவருடைய நாமமும் நம்மிடத்திலே உள்ள மாறாத விசேஷங்கள்.*

## <u>எபிரெயர்/Hebrews 6:17-19</u>

அந்தப்படி, தேவனும் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஓர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார்.
நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார்.
**அந்த நம்பிக்கை நமக்கு <u>நிலையும்</u> <u>உறுதியும்</u> திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும <u>நங்கூரமாயிருக்கிறது</u>.**
Because God wanted to make the unchanging nature of his purpose very clear to the heirs of what was promised, he confirmed it with an oath. [18]God did this so that, by two unchangeable things in which it is impossible for God to lie, we who have fled to take hold of the hope offered to us may be greatly encouraged. [19]We have this hope as an anchor for the soul, **firm and secure**. It enters the inner sanctuary behind the curtain,

*இந்த வார்த்தைகள் அனைத்தும் கொடுக்கப்படுமுன்னே...*
அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்;..(யோபு 13:15)..என்று யோபு சொல்வதை அறிந்திருக்கிறோம்.
*இந்த வார்த்தைகள் அனைத்தும் கொடுக்கப்பட்டு முடியுமுன்னே...*
நாங்கள் **எப்பக்கத்தி**லும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; **(2கொரி 4:8)** என்று
பவுல் சொல்வதை அறிந்திருக்கிறோம்.

*இந்த வார்த்தைகள் அனைத்தும் பூரணமாக கொடுக்கப்பட்டு...*
பூரணமான இந்த வேதம் நம் கையிலே இருக்கும் இந்த காலத்தில்,
சத்தியமும் கிருபையும் நிறைந்தவராய் நம் இருதயத்தில் வாசம் செய்யும் தேவன்
நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்.
என்று நிச்சயமாக நாம் விசுவாசிக்க முடியும். ஆமென்.

## Let us pray. ..

*சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும்,*
*கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.*
For God was pleased to have all his fullness dwell in Christ, and through Christ to reconcile to himself all things, whether things on earth or things in heaven, by making peace through his blood, shed on the cross.
நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.